53—

தொழிற்பயிற்சி நிலையம்

***50809—திரு. எஸ். நாகராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி, சாலை கிராமத்தில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தான மக்கள் பணியில் முத்திரை பதித்து, 3 ஆண்டுகளை முடித்து, 4 ஆவது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் தமிழகம் மட்டுமல்ல; இந்தியாவே பாராட்டுகின்றது என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

விடை (அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்திற்குள் செயல்பட்டுவரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 10 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2,392 இருக்கைகளில், மொத்தம் 1,169 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இக்காலியிடங்களில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், சிவகங்கை மாவட்டத்தில் செயல்படும் 6 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான 134 இருக்கைகளில், 95 இருக்கைகள் நிரப்பப்பட்டு, 39 இருக்கைகள் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், மானாமதுரை தொகுதி, இளையான்குடி, சாலை கிராமத்தில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டிய தேவை தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2020 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன் அவர்கள்.*

திரு. எஸ். நாகராஜன்: *கண்ணியமிக்க இம்மாமன்றத்தை கண்ணியம் தவறாமல் வழி நடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "The Most Powerful Woman in India" *என்று ஆங்கில நாளேடுகளால் பாராட்டப்பெற்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முத்திரை பதித்த மூன்றாண்டு நாயகனே! சேலத்து மாங்கனியே! குடிமராமத்து நாயகனே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சைத் தரணியின் காவேரி டெல்டா பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண்மை மண்டலமாக அறிவித்த விவசாயிகளின் பாதுகாவலன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக இணை ஒருங்கிணைப்பாளர் அய்யா அவர்களை வணங்குகிறேன். தென்னாட்டுச் சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன், கழக ஒருங்கிணைப்பாளர், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அய்யா அவர்களையும் வணங்குகிறேன். எங்கள் சிவகங்கை மண்ணின் மைந்தர், எளிமையின் சிகரம், தமராக்கி தந்த நாட்டாமை, மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அய்யா அவர்களை வணங்குகிறேன். எங்கள் மாவட்டத்தின் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாகாடி தந்த புன்னகை மன்னன், என் மரியாதைக்குரிய எங்கள் அண்ணன், திரு. பி.ஆர். செந்தில்நாதன் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களையும் வணங்குகிறேன்.

இன்று 6–வது அகழ்வாராய்ச்சி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவங்கியிருக்கின்றது. தமிழர் நாகரிகத்தின் தொன்மையை அறிந்துகொள்ள எனது தொகுதியான மானாமதுரை தொகுதிக்குட்பட்ட திருப்புவனம் ஒன்றியம், கொந்தகை ஊராட்சி, கீழடியில் அகழ்வாராய்ச்சி செய்து, அதில் கிடைக்கப்பெற்ற பொருட்களை காட்சிப்படுத்துவதற்காக உலகத்தரம் வாய்ந்த ஒரு புதிய அகழ் வைப்பகம் அமைத்திட 12.21 கோடி ரூபாய் நிதி ஒதுக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு கோடானு கோடி நன்றி மலர்களை எனது தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையான்குடி ஒன்றியம், 55 ஊராட்சிகளையும், 279 உட்கிராமங்களையும் உள்ளடக்கிய ஒன்றியம் ஆகும். இளையான்குடி ஊராட்சி ஒன்றியம், 86,680 மக்கள் தொகை கொண்டது; இளையான்குடி பேரூராட்சி 20,812 மக்கள் தொகையைக் கொண்டது. ஆக மொத்தம் 1,07,492 மக்கள் தொகையுடன்கூடிய பெரிய ஒன்றியம் இதுவாகும். இளையான்குடி ஊராட்சி ஒன்றியம் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இங்குள்ள மாணவ, மாணவிகள் தொழிற்பயிற்சி பெறவேண்டுமானால், 20 கி.மீ. முதல் 25 கி.மீ. தூரம் சென்று, கல்வி பயில வேண்டிய சூழ்நிலை உள்ளதால், இளையான்குடி ஒன்றியம், சாலை கிராமத்தில் ஒரு புதிய தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் கோரிக்கையை வைத்து, அதைச் செய்து தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கடந்த 9 ஆண்டுகளில் 26 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதுதவிர, 2019–2020 ஆம் ஆண்டில், காஞ்சிபுரம் மாவட்டம், பெரும்பாக்கம், நாகப்பட்டினம் மாவட்டம், செம்போடை ஆகிய இரண்டு இடங்களில் புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற பகுதியில் அவசியம் ஏற்படின், புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்குவதற்கு முன்னர், அப்பகுதியிலுள்ள மாணவ, மாணவியர்களிடையே உள்ள வரவேற்பு மற்றும் அப்பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்களில் ஏற்படும் வேலைவாய்ப்புகள் ஆகியவற்றைக் கள ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். நாகராஜன் அவர்கள்.

2020 பிப்ரவரி 19]

திரு. எஸ். நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும் என்று கூறியதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் தொழிற்பயிற்சிப் பள்ளியை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அம்மாவின் அரசு முயற்சி மேற்கொள்ளுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆண்டே தொழிற்பயிற்சி நிலையத்தை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பியிருக்கிறார். இதுகுறித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்கிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 54, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

54—

சமுதாயக் கூடம்

9785—திரு. மு.பெ. கிரி:

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, தாணிப்பாடி ஊராட்சி, அம்பேத்கர் நகரில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரத்தையும், ஈரத்தையும் இரு கண்களாகப்